(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 41.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 யூலை 18 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

கௌரவ கபில அதுகோரல

கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2023 யூலை 14 ஆம் திகதி 'வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் (திருத்தம்)' எனும் சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**II**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'ஆயுர்வேத (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட, 2023 யூலை 07ஆம் திகதி என்னால் அறிவிக்கப்பட்ட ஒரு மனுவுக்கு மேலதிகமாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் ஐந்து மனுக்களின் பிரதிகளும், 'பிரதேச சபைகள் (திருத்தம்)', 'நகர சபைகள் (திருத்தம்)' மற்றும் 'மாநகர சபைகள் (திருத்தம்)' எனும் மூன்று சட்டமூலங்கள் தொடர்பாக வெவ்வேறாக ஐந்து மனுக்கள் வீதம் உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் பிரதிகளும் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன். "

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2023 ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை; மற்றும்

(ii) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 14 ஆம் திகதிய 2336/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை மற்றும் ஒழுங்குவிதிகளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை கல்வி பற்றிய துறைசார் மேற்பாரவைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்—

(i) 2022 ஆம் ஆண்டுக்கான தபால் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான வெகுசன ஊடக அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளை ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்விதிகளை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொலிஸின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2020 ஆம் ஆண்டுக்கான லங்கா சதொச லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ விதுர விக்கிரமநாயக்க அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2019 ஆம் ஆண்டுக்கான காலி மரபுரிமை மன்றத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஆண்டறிக்கையையும் நிதிசார் கூற்றுக்களும்; மற்றும்

(iii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான புத்தசாசன நிதியத்தின் வருடாந்த அறிக்கைகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) பொது மனுக்கள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ காமினி லொக்குகே சார்பாக கல்வி அமைச்சர் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான பொது மனுக்கள் பற்றிய குழுவின் எட்டாவது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2017/2018 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட றக்னா ஆரக்ஷக லங்காவின் வருடாந்த அறிக்கை;

(ii) 2018/2019 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட றக்னா ஆரக்ஷக லங்காவின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iii) 2019/2020 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட றக்னா ஆரக்ஷக லங்காவின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) இலங்கை மத்திய வங்கிச் சட்டமூலம்;

(ii) வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்;

(iii) 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான தீர்மானம்; மற்றும்

(iv) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) களுத்துறை, கலமுல்ல, 29 ஆம் கம்பத்திற்கு அருகாமையில் எனும் முகவரியில் வதியும் திரு. எம்.பி. ஜயசேகரவினது 2023.04.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அநுர திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(2) களனி, தலுகம, லும்பிணி மாவத்தை, இல. 93 இல் வதியும் திரு. பீ. ஜயசிரியினது 2023.03.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நிமல் லான்சா சமர்ப்பித்தார்.

(3) நுவரெலியா, கிளேன் ஃபோல் வீதி, இல. 33/11 ஏ யில் வதியும் திரு. கால்லகே ஜினப்பிரியவினது 2023.05.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த சமர்ப்பித்தார்.

(4) கண்டி, ஒகஸ்தாவத்த, இல. 311 இல் வதியும் திரு. எச்.எஸ். செனெவிரத்னவினது 2023.05.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நிமல் பியதிஸ்ஸ சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல்:** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் தொடர்பான சட்டத்தை ஒரு சீராக ஏற்புடையதாக்குவதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதிப்பதற்குத் தண்டனையளிப்பதிலான நடவடிக்கைமுறைக்காக ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் 2023 பெப்ரவரி 21 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 1.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகள் மற்றும் 2023 மே 12 மற்றும் 2023 யூன் 09 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகள் என்பனவற்றினால் தடைபெறாமல், இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவானது, சபாநாயகரால் நியமிக்கப்படுகின்ற இருபத்து மூன்று (23) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகள் மற்றும் 2023 சனவரி 19 மற்றும் 2023 யூன் 20 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகள் என்பனவற்றினால் தடைபெறாமல், அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவானது, சபாநாயகரால் நியமிக்கப்படுகின்ற பதினேழு (17) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சட்டமூலம் கொண்டுவர அனுமதி :** "2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ இரான் விக்கிரமரத்ன பிரேரித்தார். கௌரவ ஹேஷா விதானகே அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

(மு.ப. 11.36 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**10. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2023 மார்ச் 28 ஆம் திகதிய 2325/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 09 ஆம் திகதிய 2335/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட கருமங்களை விசாரிப்பதற்கும் அது தொடர்பாக பொருத்தமான விதப்புரைகளை மேற்கொள்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு:** கௌரவ லலித் வர்ண குமார அனுவதிக்க கௌரவ டீ. வீரசிங்க பின்வருமாறு பிரேரித்தார்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2020 டிசம்பர் 03 ஆம் திகதி திரு. என். ஜீ. புஞ்சிஹேவா (தவிசாளர்), திரு. எஸ். பி. திவாரத்ன, திரு. எம். எம். மொஹமட், திரு. கே. பி. பி. பத்திரண மற்றும் திருமதி பி. எஸ். எம். சார்ல்ஸ் ஆகியோரைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாதலாலும்;

அரசியலமைப்பின் 104ஆ(3)ஆம் உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழு பாரளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாதலாலும்;

அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 30(4) ஆம் உறுப்புரை மூலம், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பதவிவகியாதொழிவதுடன் தற்காலிக உறுப்பினர்களின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்து நிறைவேற்றுவதாதலாலும்;

உள்ளூரதிகார சபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்களை தேர்தல் ஆணைக்குழு 2023 ஜனவரி 18 ஆம் திகதி கோருவதற்குக் கருதியதாதலாலும்;

ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் வாக்களிப்புத் தினமாக 2023 மார்ச் 09 ஆம் திகதியை நிர்ணயிப்பதற்கு தீர்மானித்ததுடன் ஏனைய மூன்று உறுப்பினர்களின் சம்மதத்தைப் பெற்றுள்ளதாகக் கோரியதாதலாலும்;

2023 மார்ச் மாதத்தில் அத்தகைய தேர்தலை நடாத்துவதற்கான நிதிகளைக் கண்டறிவது சவாலாக அமையும் என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுச் செயலாளர் நீதிமன்றத்தில் சத்தியக்கடதாசி ஒன்றை தாக்கல் செய்துள்ளதாதலாலும்;

அத்தகைய தேர்தலை நடாத்துவதற்கு அனைத்து முன்நிபந்தனைகளும் நிறைவேற்றப் படுவதையிட்டு ஆணைக்குழு திருப்தியடைகிறதா எனும் கேள்வி எழுவதாதலாலும்;

2023 ஜனவரி 25 ஆம் திகதி ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரான திருமதி பி. எஸ். எம். சார்ல்ஸ் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததாலும்;

உள்ளூரதிகார சபைத் தேர்தல் தொடர்பாக எழுந்த விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழு அரசாங்க நிதிக்குப் பொறுப்பான பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்வதற்குத் தவறியதாதலாலும்; மற்றும்

பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்பட்டிருந்தால், அது விசாரணைசெய்யப்படுவதுடன் அது தொடர்பாக பொருத்தமான விதப்புரைகள் மேற்கொள்ளப்படுதலும் வேண்டும் என்பதாதலாலும்;

பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட கருமங்களை விசாரிப்பதற்கும் அது தொடர்பாக பொருத்தமான விதப்புரைகளை மேற்கொள்வதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏழு (07) உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக விரிவானதோர் ஆய்வினை மேற்கொள்வதற்காக குழுவினால் அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் எவரேனும் ஆளை, குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்துமூலமாக அல்லது வாய்மொழிமூலமாக பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலும் தடைபெறாது கூடுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது, அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஒரு (01) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படும் அத்தகைய காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. ஒத்திவைப்பு ( பலஸ்தீன் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்) :** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது..

“கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக” வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.07 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

“கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக” வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.59 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம், பி.ப. 5.10 மணிக்கு சபைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினரால் 2023 யூலை 19 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.